## பல்வேறு துறைகளின் பேரிடர் காலங்களில் அவர்களது பணிகளும் பொறுப்புகளும்

1. வருவாய்த்துறை:

- வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர்அலுவலகங்களில் அவசரகால கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட வேண்டும்.
- கட்டுப்பாட்டு அறையில் ஓர் அலுவலர் சுழற்சி முறையில் பணிபுரிய வேண்டும்.
- Wireless - கம்பியில்லா தொலைபேசி கருவிகள் நல்ல நிலையில் உள்ளதா என்பதை உறுதிசெய்துக்கொள்ள வேண்டும்.
- தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை வெளியேற்ற தகுந்த மாற்று பாதையினை கண்டறிய வேண்டும்.
- தகுந்த அரசு கட்டிடங்கள்/ திருமண மண்டபங்களை முன்கூட்டியே தேர்வு செய்து அவற்றில் குடிநீர், கழிப்பிட வசதிகள் உள்ளனவா என்பதை உறுதிசெய்ய வேண்டும்.
- ஏரிகரை மற்றும் குளங்களின் கரைகளை கண்காணித்து குறைகள் இருப்பின் பொதுப்பணித்துறை மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)அவர்களிடம் தகவல் தெரிவிக்க வேண்டும்.
- மழை வெள்ளங்கள் குறித்த உண்மையான தகவல்கள் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

2. காவல்துறை:

- மழைவெள்ளங்கள் குறித்த தகவல்களை வருவாய்த்துறைத் துறையுடன் பகிர்ந்துகொண்டு பொதுமக்களுக்கு சரியான தகவல்கள் அளிக்கப்பட வேண்டும்.
- ஆறு / ஏரி/ குளம் ஆகியவற்றில் வெள்ளம் ஏற்படும்போது பொதுமக்கள் அவ்விடங்களுக்கு செல்லாமல் தடுக்கப்பட வேண்டும்.
- வருவாய்த்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறையுடன் இணைந்து மீட்புப்பணிகளில் ஈடுபடவேண்டும்.

3. தீயணைப்புத்துறை:

- ரப்பர்படகு, பாதுகாப்பு உடை, மீட்பு மற்றும் தேடுதல் போன்றவற்றை போதுமான அளவு இருப்பு வைத்திருக்க வேண்டும்.
- நீரை வெளியேற்ற பம்புசெட் மற்றும் தீயணைப்பு கருவிகளை தயார்நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.
- அவசர காலங்களில் தேவையான நீச்சல் வீரர்களை தேர்வுசெய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

4.பொதுப்பணித்துறை:

- அரசு பள்ளிகள், சமுதாய கூடங்கள் மற்றும் தனியார் திருமண மண்டபங்களை தேர்வு செய்து அவற்றில் பாதிக்கப்பட்ட பொதுமக்களை தங்குவதற்கு வசதிகள் ஏற்படுத்த வேண்டும்.
- மின்வசதி, குடிநீர்வடிகால் வசதிகளை உறுதிசெய்தல் வேண்டும்.
- அரசு கட்டிடங்களை தூய்மையுடம் வைத்துக்கொள்ள வேண்டும்.

5.பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரங்கள்)

- நீர்பிடிப்பு பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், வாய்க்கால்களில் தூர்வாறுதல் வேண்டும்.
- கல்வெட்டுகள் மற்றும் பாலங்கள் நல்லநிலையில் உள்ளனவா என்பதை உறுதிசெய்துக்கொள்ள வேண்டும்.
- ஏரிக்கரை மதகுகளை உரிய பராமரிப்பு பணி மேற்கொண்டு மழைவெள்ள காலங்களில் உடைப்பு ஏற்படா வண்ணம் பாதுகாக்கப்பட வேண்டும்.
- மணல் மூட்டைகள் போதுமான அளவு இருப்புவைத்திருக்க வேண்டும்.
- JCB மற்றும் மின் ரம்பம் வைத்திருக்கும் உரிமையாளர்களின் பட்டியல் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

6.நெடுஞ்சாலைத்துறை:

- அனைத்து நெடுஞ்சாலைகளையும் ஆய்வு செய்து சாலைகளில் நீர் தேங்காவண்ணம் சாலைகளை ஒழுங்கப்படுத்த வேண்டும்.
- சலைகளில் உள்ள கல்வெட்டுகள் நல்ல நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.
- மரம்அறுக்கும் கருவிகள், புல்டோசர் மற்றும் JCB தயார்நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.
- தாழ்வான பகுதிகளிலிருந்து மக்களை பாதுகாக்க அவசரகால வழிப்பாதையினை கண்டறிதல் வேண்டும்.

7.தமிழ்நாடு மின்சார வாரியம்:

- மின்உபகரணங்கள் போதுமான அளவு இருப்பு வைத்திருக்க வேண்டும்.
- மழைகாலங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால் ஜெனரேட்டர் பயன்படுத்தப்பட வேண்டும்.
- மின்இணைப்பு துண்டிக்கப்பட்ட பகுதிகளில் உடன் சென்று மின்இணைப்பு துண்டிப்பை சரிசெய்ய வேண்டும்.
- மழைகாலங்களில் போதுமான ஊழியர்களை பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.
- ஜெனரேட்டர் உரிமையாளர்களின் பட்டியலை பெற்று தயார்நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

8.ஊராட்சிகள் / பேரூராட்சிகள்:

- ஒவ்வொரு ஊராட்சியிலும் அக்டோபர் 2ம்தேதி நடைபெறும் கிராம சபா கூட்டத்தில் மழை வெள்ளம் குறித்த விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.
- நீர்பாசன வாய்கால்களை நல்ல நிலையினை வைத்துக்கொள்ள வேண்டும்
- நீர்தேக்க தொட்டிகளை ஆய்வு செய்து அவற்றை நல்லநிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.
- ஏரிக்கரை அருகே மணல் மூட்டைகளை போதுமான அளவு இருப்பு வைத்திருக்க வேண்டும்.
- பாதுக்காக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகிக்க வழிவகை செய்துக்கொள்ள வேண்டும்.
- பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு தயார்செய்வதற்கு ஏற்றவாறு சமயல் அறைவசதிகளை ஏற்படுத்தி தருதல் வேண்டும்.

9.உணவுபொருள் வழங்கல் துறை:

- மழைகாலங்களில் போதுமான அளவு உணவுப்பொருள், மண்ணெண்ணெய், மற்றும் கோணிப்பைகள் இருப்பு வைத்திருக்க வேண்டும்.
- அத்தியாவசிய பொருட்கள் போதுமான அளவு இருப்பு வைத்திருக்க வேண்டும்.
- பெட்ரோல், டீசல் LPG போதுமான அளவு இருப்பு வைத்திருக்க வேண்டும்.

10.மருத்துவத்துறை:

- மழைகாலங்களில் அரசு மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் போதுமான அளவு இருப்பு வைத்திருக்க வேண்டும்.
- மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் விபரங்களை சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.
- பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த துண்டு பிரசுரங்களை விநியோகிக்கப்பட வேண்டும்.
- அவசர காலங்களில் மருத்துவமனைகளுக்கு எளிதில் செல்லும் வகையில் ஆம்புலன்ஸ் மற்றும் பிக்கப்வேன்களை தயார்நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

11.சுகாதாரத்துறை:

- துணை இயக்குநர் சுகாதாரத்துறை அத்தியாவசிய மருந்து பொருட்களை தேவையான அளவு இருப்பு வைத்திருக்க வேண்டும்.
- போதுமான அளவு தொற்றுநோய் தடுப்பு மாத்திரைகள் பிளிசிங் பவுடர் இருப்பு வைத்திருக்க வேண்டும்.
- ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான கட்டமைப்பு வசதிகள் இருக்க வேண்டும்.
- தூய்மைப்படுத்தப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்திதர வேண்டும்.
- மழைகாலங்களில் தொற்றுநோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

12.கால்நடை பராமரிப்புத்துறை:

- மழைகாலங்களில் கால்நடைகளுக்கு தொற்றுநோய் பராவாமல் இருக்க போதுமான கால்நடை மருந்துபொருட்கள் இருப்பு வைத்திருக்க வேண்டும்.
- மாட்டுத்தீவணங்கள் போதுமான அளவு இருப்பு வைக்க வேண்டும்.

13.போக்குவரத்துறை:

- மோட்டார் வாகனங்கள் அனைத்தும் தயார்நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.
- பஸ் உரிமையாளர்களின் பட்டியல், தொலைபேசி எண்களை சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.
- தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை அவசர காலங்களில் மாற்றுபாதையினை கண்டறிந்து பயன்படுத்த வேண்டும்.